# சாத்தான



## இந்த உலகத்தின் கடவுள

### சாத்தான் கெட்டவர்களைக் கட்டுப்படுத்துகிறான்

சிறைச்சாலைகளின் கம்பிகளின் பின்னாலும், கடினமான தண்டனையிலும் தங்கள் உடைந்த சரீரத்திலும் முகங்களிலும் பாவத்தைக் காண்பிக்கும் ஆண்களோடும் பெண்களோடும் நான் பேசியுள்ளேன். பாவத்தின் கடவுள் சாத்தான் என்பதையும் அவர்களின் வாழ்க்கையின் மீதுள்ள அவனின் வல்லமையையும் அவர்களில் அநேகமானோர் விளங்கிக்கொள்ளவில்லை. சாத்தானின் ஆளுகையின் கீழுள்ள ஆண்களினதும் பெண்களினதும் உடைந்துபோன வாழ்வைக் காண்பது துக்கமானதாயுள்ளது.

### சாத்தான் நல்லவர்களைக் கட்டுப்படுத்துகிறான்

எனது நண்பரே! இன்னொரு விதத்தில் நாம் பார்க்கையில் நல்ல பெற்றோராய் உள்ள ஆண்களும் பெண்களும் முதல்தரப் பிரஜைகளும் நல்லொழுக்கத் தலைவர்களும் சபை அங்கத்தவர்களுங் கூட சாத்தானின் ஆளுகையின் கீழ் உள்ளனர் இந்த இரண்டுதரமான மக்களும் எவ்வாறு ஒரே நபரின் ஆளுகையின் கீழாக இருக்கின்றனர் என்பதை விளங்கிக்கொள்வது கடினமானது. இதற்கான பதில் தேவனின் வார்த்தையில் இருந்து வருகிறது. அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான் விசுவாசியாதவனோ தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால் அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று. யோவான் 3:18 தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு இப் பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். 2கொரி 4:4

### சாத்தான் கள்ளப்போதகர்களைக் கட்டுப்படுத்துகிறான்

பாவத்தினால் சபிக்கப்பட்ட உலகிற்காக தேவ குமாரன் தனது ஜீவனைக் கொடுத்ததையும் வேதாகமத்தையும் பார்க்காதபடிக்கு ஒருமனிதனை விலக்கிவைப்பதற்கு சாத்தானுக்கு வல்லமையும் செல்வாக்கும் இருக்கிறது, அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள் கபடமுள்ள வேலையாட்கள். கிறிஸ்துவினுடைய

அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாய் இருக்கிறார்கள் 2கொரி 11:13-14

இந்த வசனத்தில் தேவன் சாத்தானை ஒரு ஏமாற்று பவனாகக் காண்பிக்கிறர் சமய ரீதியான வேலைகளிலும் கூட சில மனிதர்கள் சாத்தானுக்கு உதவிசெய்வதற்கு அவனுடன் இணைந்துள்ளனர். ''கள்ளப்போதகர்களை உண்மையானவர்களிடம் இருந்து எவ்வாறு இனங்காண்பது?'' என நீங்கள் கேட்கக் கூடும். இயேசு கிறிஸ்து எல்லாப் பாவக்கடன்களுக்குமாக தமது விலையேறப்பெற்ற சொந்த இரத்தத்தினால் செலுத்தி முடித்தார் என்பதை கள்ளப் போதகர்கள் குறிப்பிடமாட்டார்கள்

''இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் மன்னிப்பு உண்டாகாது.'' எபிரெயர் 9:22 ''நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினார்.'' வெளி 1:6 அவர்கள் நற்கிரியைகளைப்பற்றியும் சபை அங்கத்துவத்தைப்பற்றியும் கற்பிப்பார்கள். ஆனால் நீர் உமது பாவ வாழ்க்கையில் இருந்து திரும்பி இயேசு உம்மை இரட்சிப்பதற்காக செய்ததை விசுவாசிக்க வேண்டுமென ஒருபோதும் கற்பிக்க மாட்டார்கள். ''அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்.'' லூக் 13:3 ''கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்.'' 1கொரி 15:3

அவர்கள் பாவத்தைக் குறித்து நகைப்பார்கள், ஆனால் நிகழ்காலத்திலும் நித்திய காலத்திலும் பாதிப்புண்டு. ''மூடர் பாவத்தைக் குறித்து பரியாசம் பண்ணுக்றார்கள்.'' நீதிமொழி 14:9 ''பாவத்தின் சம்பளம் மரணம்'' ரோமர் 6:23 மனிதர்கள் எவ்வளவிற்கு பாவத்தை வெறுக்கிறார்கள் என்பதில் இருந்து அவர்கள் எவ்வளவிற்கு தேவனில் அன்பு வைத்திருக்கிறார்கள் என்பதை அளவிடலாம்.

சாத்தானை மேற்கொள்ளும் வல்லமை இயேசுவுக்குண்டு!

''நான் எப்படி இரட்சிக்கப்பட முடியும்?'' என நீங்கள் கேட்கலாம். தேவனின் வல்லமையால் மட்டுமே முடியும். ''நம்முடைய கர்த்தராகிய

இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்'' 1கொரி 15:57

'அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படிக்கு அதிகாரங்கொடுத்தார்.' யோவான் 1:12 பாவத்தினால் சபிக்கப்பட்ட உலகிற்காக இயேசு கிறிஸ்து மரித்த மெய்யான கிரியையை வேதாகமம் வெளிப்படுத்துகிறது. எமது பாவத்திற்காக பரிபூ ரணமாக செலுத்தி எரிகிற நரகத்தில் இருந்து எம்மைத் தப்புவிப்பதற்காக கிறிஸ்து எமது இடத்தில் மரணித்தார்!!

தீர்மானம் உம்முடையது!

இயேசு உம்மை இரட்சிப்பாரென நீர் மெய்யாக விசுவாசிப்பீரானால் இப்போதே அவரிடம் கேளும். நீர் ஒரு உதவியற்ற குற்றமான பாவியென்பதை அறிக்கையிடும். சாத்தானின் வல்லமையில் இருந்தும் நித்தியத்தை நரகத்தில் கழிப்பதில் இருந்தும் விடுதலையடைய வேண்டுமென தேவனிடம் கேளும்.

நீங்கள் இத்துண்டுப்பிரதியை வாசித்து இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக விசுவாசிக்கத் தீர்மானித்திருப்பீர்களானால் எமக்கு எழுதித் தெரிவியுங்கள். நாம் உங்களுக்கு உதவி செய்யவும், இலவசமாகப் புத்தகங்களை அனுப்பவும் விரும்புகிறோம்.

உமது பெயர்: ________________________________________

முகவரி: ________________________________________

________________________________________

________________________________________

**FELLOWSHIP TRACT LEAGUE**
P.O. BOX 164 • LEBANON, OH 45036
www.fellowshiptractleague.org © Tract 5612 (Tamil - Sri Lanka)
கர்த்தர் வழங்குவதைப்போல எல்லாப் பிரசுரமும் இலவசம